# நாடக நன்னூல் – ஒரு பார்வை

**முனைவர் ச.அ. சுஜா**

**உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 18.**

Sujafatimacollege2012@gmail.com

**45**

**ஆய்வுச் சுருக்கம்**

நாடக நன்னூல் எனும் தமிழ் நாடக இலக்கண நூலை எழுதியவர் ப.சு. இலட்சுமி அவர்கள். இவருடைய முனைவர் பட்ட ஆய்வு 'பரிதிமாற்கலைஞரின் நாடகவியல் திறனாய்வு' என்னும் பொருண்மை ஆகும். பரிதிமாற்கலைஞர் வடமொழி, ஆங்கில நாடக மரபுகளைப் பின்னபற்றி நூலை எழுதியதாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே இவ்வாய்வாளர் தமிழில் நாடக இலக்கண நூல்கள் இல்லையா என ஆராய முனைந்து நாடக இலக்கணம் குறித்த பல்வேறு செய்திகளைத் தேடி உரையாசிரியர் பலரின் மேற்கோள் நூற்பாக்களில் அவை பொதிந்து இருப்பதை உணர்ந்து தொகுத்தும் வகுத்தும் நூலாக வெளியிட்டுள்ளார். அந்த நாடக நன்னூலை மக்களின் பார்வைக்குக் கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கம்

**திறவுச் சொற்கள்**

நாடக இலக்கண நூல்கள் - ஷாஜகான் சனி – விலக்கியல் – அரங்கியல் – இசையியல்.

**முன்னுரை**

தமிழில் கிடைத்துள்ள நூல்களில் பழமையான நூலாகிய தொல்காப்பியத்திற்குள்ளே நாடகம் மற்றும் நாடகத்திற்கான மெய்ப்பாடுகள் குறித்த இலக்கணம் இடம்பெற்றுள்ளது. எனவே நாடத்திற்குரிய இலக்கண வரலாறு தொல்காப்பியம் முதலே தொடங்கியுள்ளதை உணரலாம். தொல்காப்பியத்தின் பொருளியலில் நாட்டிய மரபு என்ற ஒரு தொடர் கையாளப்பட்டுள்ளது.

**"ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்நாட்டிய**
**மரபின் நெஞ்சுகொளின்" (தொல்.பொருள்.243.)**

என்ற அடிகளில் வரும் நாட்டிய மரபை நாடகத் தொடர்புடையதாகவே கருதுகிறார் நாட்டிய வரலாறு குறித்து ஆராய்ந்த முனைவர் மா.சு. சரளா[1]. இதே போன்று கா. சிவத்தம்பி அவர்கள் "போரின் முன்னும் பின்னும் நடந்த போர்க்களச் சடங்குகளில் தமிழ் நாடகம் பிறந்த்து. களவேள்வி என்ற சடங்கே தமிழ் நாடகத்தின் தொடக்கம்"[2] என்கிறார். இவ்வாறு நாடகம் என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் கிடைத்துள்ளன.

தமிழ் நாடக ஆய்வின் முன்னோடியான இரா. குமரவேலன் "கிரேக்க சமஸ்கிருத நாடகங்கள் தோன்றுவதற்கு முன்பே தமிழில் நாடகங்கள் தோன்றிற்றென்றால் அது மிகையாகாது. சோபோக்கிளிசுக்கும் காளிதாசனுக்கும் முற்பட்டவராகிய தொல்காப்பியர் நாடகத்தின் இலக்கணத்தை ஒருவாறு கூறியிருப்பதே இதனை உறுதிப்படுத்தும்"[3] என்று கூறுவார்.

**உரைகள் வழி அறியப்படும் நாடக இலக்கண நூல்கள்**

இறையனார் அகப்பொருள் உரை → அகத்தியம், நூல், கலைக்கோட்டுத் தண்டு, முதுநாரை, முதுகுருகு, இசை நுணுக்கம், சிற்றிசை, பேரிசை, கூத்து, வரி ஆகிய 10 நூல்கள் பெயரைத் தந்துள்ளார்.

யாப்பருங்கல விருத்தி உரை → செயன்முறை, செயிற்றியம், அகத்தியம், சந்தம், பொய்கையார் நூல், வாய்ப்பியம் என ஆறு நூல்களைக் குறிப்பிட்டுள்ளது.

தொல்காப்பியம் (இளம்பூரணர்உரை)→அகத்தியம், செயிற்றியம் என இரண்டு என்கிறார்.

சிலப்பதிகாரம் (அரும்பதவுரை)→ செயிற்றியம், பதினாறு படலம் ஆகிய இரண்டு நூல்களைச் சுட்டியுள்ளார்.

சிலம்பு(அடியார்க்கு நல்லார்) → பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பெருங்கலம், நூல், தாளவகையோத்து, இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரத சேனாபதியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல் ஆகிய பதினேழு நூல்களைக் குறிப்பிட்டள்ளார்.

பேராசிரியர் → அகத்தியம், செயிற்றியம், யாழ் நூல், பாட்டுமடை, வஞ்சிப்பாட்டு. மோதிரப் பாட்டு, கடகண்டு, விளக்கத்தார் கூத்து ஆகிய எட்டு பெயர்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

உ.வே.சாமிநாதையர் → கச்சபுடவண்பா, தாள சமுத்திரம், சுத்தானந்தப் பிரகாசம் என்னும் மூன்று புதிய நாடக இலக்கண நூல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்சொன்ன முறையில் உரைவழி அறியலாகும் 39 நாடக இலக்கண நூல்களுள் 31 நூல்கள் நாடக இலக்கண நூல்கள் என்றும் மீதமுள்ளவை நாடகச் செய்யுள் நூல்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார் ஷாஜகான் கனி.

பரிதிமாற்கலைஞர் தம் நாடகவியல் எழுதத் துணை செய்த தமிழ் நூல்களின் வரிசையில் இரண்டு பெயர்களைச் சுட்டியுள்ளார்.

1. கூத்தநூல் (பிற்காலம்)
2. அரபத்த நாவலர் பரத சாத்திரம். எனவே 31+2 சேர்த்து 33 நாடக இலக்கண நூல்களின் பெயர்கள் கிடைத்துள்ளன. இதனோடு கூத்தநூல் குறிப்பிட்டுள்ள,

**“அகத்தியன் இயற்றிய அகத்திய முதல்நூல்**
**சிகண்டி இயற்றிய தேன்இசை சார்பு**
**பேரிசை நாரை குருகு கூத்து”**[4]

11 நூற்பெயர்களுள் 9 நூல்கள் இலக்கண நூல்கள் என்கிறார் ஷாஜகான் கனி அவர்கள். எனவே மொத்தம் 42 நாடக இலக்கண நூற்பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன.

இந்த 42 நாடக இலக்கண நூல்கள் பற்றிய செய்திகளை அந்த நூல்களின் பெயர்கள் கிடைத்த காலவரிசைப்படி நிரல்பட அமைத்து சிறு குறிப்புகளும் கொடுத்து விளக்கியுள்ளார் ஷாஜகான் . இந்த 42 நாடக இலக்கண நூல்களின் வரலாற்று வரிசையில் 43-வது நூலாக

பரிதிமாற்கலைஞரின் 'நாடகவியல்' வைக்கத்தக்கது என்றும், 1926ல் விபுலானந்த அடிகள் இயற்றிய 'மதங்க சூளாமணி' - 44வது நூல் என்றும் 1998ல் மேலகரம் முத்துராமன் இயற்றிய 'நாடகவியல்' என்ற நூல் 45-வது என்றும் அமைத்துக் கொண்டால், 'நாடக நன்னூல்' என்ற நூலை 46வது நாடக இலக்கண நூலாகக் கொள்ளலாம் என ஷாஜகான் கனி அவர்கள் நாடக இலக்கண வரலாற்று ஆராய்ச்சி என்னும் இந்த நூல் முன்னுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் இந்நூலுக்கு மிகச்சிறந்த நீண்ட முன்னுரை கொடுத்து உள் உள்ள இயல் பிரிப்புகளையும் விளக்கியுள்ளார். இந்த நூல் விலக்கியல், அரங்கியல், இசையியல் என மூன்று இயல்களாய் பிரிக்கப்பட்டுள்ளன. பின்னிரண்டு இயல்களும் நாம் அடிக்கடி கேட்டும், பயன்படுத்தியும் வருகின்ற வார்த்தைகள். எனினும் இந்த விலக்கியல் என்ற வார்த்தை நமக்குப் புதியதா? இல்லையா?. சிலப்பதிகார அரங்கேற்று காதையில் 'விலக்கினிற் புணர்த்து' என்ற சிறிய தொடருக்கு அடியார்க்கு நல்லார் பல பக்கங்கள் உரையெழுதியுள்ளார். இந்த 'விலக்கு' என்பது நாடக ஆசிரியர்க்கான இன்றியமையான தகுதிகளை உணர்த்துவதாகும். நாடக வல்லுநர்கள் அறிந்திருக்க வேண்டிய மிக இன்றியமையாத நாடக உறுப்பிலக்கணம் ஆகும்.

1. நாடகத்தை இயக்கும் இயக்குநர் அறிந்திருக்க வேண்டிய 14 பண்புகள் இந்த 'விலக்கு' என்ற வார்த்தைக்குள் அடங்கியிருக்கிறது. இந்த நூலாசிரியர் ப.சு.இலட்சுமி மிக அழகானக் குறிப்புரை தந்தும், நூற்பா வழியும் எடுத்துரைத்துள்ளார். இந்தப் 14 பண்புகள் குறித்து அறிந்து கொள்வது தமிழ் மக்களுக்கு நாடகம் என்பது எவ்வாறு அமையவேண்டும் என்பதைத் தெளிவாக உணரவைக்கிறது. உதாரணமாக 9வது பண்பாகிய 'அவிநயம்' என்ற பண்புக்கு அடியார்க்கு நல்லார் தரும் குறிப்புகள் மூலம் விளக்கம் உரைத்துள்ளார் ப.சு.இலட்சுமி. இந்த அவிநயம் என்ற பண்புக்குள் 24 வகைகள் உள்ளன. காட்சியின் உணர்வுக்கு ஏற்ப நாடக "நடிகர் முகபாவனைகள் கொண்டு நடித்துக் காட்டும் திறன் அவிநயம் எனப்பட்டது. இந்த அவிநயத்தினை நடிகர் சரியாகச் செய்கின்றனரா என்பதை நாடக ஆசிரியன் கவனித்து இயக்கும் அவனது பண்பினையே அவிநயம் என்ற விலக்குறுப்பாக வலியுறுத்தினர்". (ப.சு.இலட்சுமி, நாடக நன்னூல், ப. 82)

இந்த அவிநயத்திற்குள் சினமுற்றவன், சோம்பலுற்றவன் கள்ளுண்டவன், பொறாமையுடையவன், சிந்தையுடையவன், மயக்கமுற்றவன் என ஒவ்வொரு திறனையும் எவ்வாறு வெளிக்காட்ட வேண்டும் என நூற்பாக்களைத் தேடித் தந்துள்ளார் இந்நூலாசிரியர்.

'அரங்கியல்' என்ற இரண்டாவது இயலில் நாடக அரங்கு குறித்த முழுத்தகவல்களையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். அரங்கு அமைக்க வேண்டிய நிலம் முதல் அந்தரக்கொட்டு என்ற மரபு வரை அனைத்தையும் நூற்பாக்களுடன் நமக்குத் தந்துள்ளார்.

இசையியல் என்ற மூன்றாவது இயலில் "இசைத்தமிழின் பழைமைச் சிறப்பிலிருந்து தொடங்கி மேலைநாட்டு இசையும் தமிழ் இசையும் – அடிப்படை வேறு பாடுகள் வரை" விளக்கியுள்ளார். சிந்து, மண்டபம், தூக்கு சீர், பாணி, ஆளத்தி, நால்வகைப்பாலை, மருதப்பண்கள், யாழ் உறுப்புகள், வகைகள், குழல் (வடிவம், தயார் செய்யவேண்டிய மரங்கள், ஊதும் முறை....) தோல் கருவிகள், இசைக்கு உதவும் வாயுக்கள், உடம்பில் இசையின் அளவு எனப் படிக்கப் படிக்க அற்புதத்தையும்

பிரமிப்பையும் ஏற்படுத்துகின்ற நூல் இந்நூல்.

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இந்த அரியநூலினை இனங்கண்டு முழு மானியம் அளித்த பெருமையையுடையது இந்நூல். அரும்பாடுபட்டுத் தொகுத்தும் வகுத்தும் விரித்துக் கூறியும், இயலாதவற்றை ‘வல்லார் மாட்டுக் கேட்டுணரலாம்’ என்று தன்னடக்கத்தோடும் வெளியிடப்பட்டள்ள இந்நூல் அனைவரும் கண்டிப்பாக படிக்க வேண்டிய நூல் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புகள்**

1. மா.சு. சரளா, தமிழ் இலக்கியத்தில் நாட்டிய வரலாறு, ப. 6.
2. K. Sivathamby, Drama in Ancient Tamil Society, P. 185-187.
3. இரா. குமரவேலன், தமிழ் நாடக ஆய்வு, ப. 14.
4. மே.வீ.வேணுகோபாலப்பிள்ளை (பதி.ஆ.) பாயிரம்,நூற்.2.

**துணைநூற்பட்டியல்**

1. குமரவேலன், .இரா., - தமிழ் நாடக ஆய்வு,1978.
2. சரளா, மா.சு. - தமிழ் இலக்கியத்தில் நாட்டிய வரலாறு,1999.
3. வேணுகோபால், .மே.வீ., - செந்தமிழ்க் களஞ்சியம்,1908.(மு.ப)
4. K. Sivathamby - Drama in Ancient Tamil Society,NCBH,1981.